

## மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# இளையோர் செஞ்சிலுவை சங்க தொடக்க விழா

குழித்துறை, ஆக.14-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்க தொடக்க விழா நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் பிஜி தலைமை தாங்கினார். பேராசிரியை கீதா நிர்மல் வரவேற்றார். கல்லூரி தாளாளர் பிரவின் முன்னிலை வகித்தார். இளையோர் செஞ்சிலுவை சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கிறிஸ்து தாஸ் வில்லியம்ல் வாழ்த்தி பேசினார். தொடர்ந்து தன்னார்வலர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை அருண்ராஜ் வழங்கினார். திட்ட அலுவலர் ஜோஸ்பால் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை இளையோர் செஞ்சிலுவை சங்க பேராசிரியர்களும் மாணவிகளும் இணைந்து செய்திருந்தனர்.